# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2017 ஏப்ரல் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ நிஷாந்த சிறீ வர்ணசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.02.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/10)**

அ. கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலாளர் பிரிவிகளுள் பயன்படுத்தக் கூடிய பொதுக் கிணறுகள் எத்தனை காணப்படுகின்றன ?

ஆ. அப் பொதுக் கிணறுகளில் குடிநீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ள கிணறுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. களுத்துறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளுள் பயன்படுத்தக் கூடிய பொதுக் கிணறுகள் எத்தனை காணப்படுகின்றன ?

ஈ. அப் பொதுக் கிணறுகளில் குடிநீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ள கிணறுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

உ. கம்பஹா மாவட்டத்தில் 19 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பயன்படுத்தக் கூடிய பொதுக் கிணறுகள் எத்தனை காணப்படுகின்றன ?

ஊ. அப் பொதுக் கிணறுகளில் குடிநீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ள கிணறுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

எ. மேல் மாகாணத்தினுள் தனியார் காணிகளில் பயன்படுத்தக் கூடிய தனிப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை எத்தனை ?

ஏ. அம் மூன்று மாவட்டங்களினதும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் எத்தனை தனிப்பட்ட கிணறுகள் காணப்படுகின்றன ?

ஐ. வரட்சிக் காலத்தில் நீர் வெட்டப்படாத படி மேல் மாகாணத்தினுள் நீரினை வழங்க முடியும் என்பதனை உறுதிப்படுத்த இயலுமா ?

ஒ. மேல் மாகாணத்தினுள் சுத்தமான குடிநீரை வழங்கும் நீர் ஊற்று எது ?

ஓ. அதில் காணப்படும் நீரின் கொள்ளளவு எவ்வளவு காலத்திற்கு போதுமானது ?

**02.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.04.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/29)**

அ. கடந்த வருடத்தினுள் மாகாண வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் உங்களது அமைச்சின் மூலம் கம்பஹா, களுத்துறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் வெவ்வேறாக என்ன ?

ஆ. மேலே குறிப்பிடப்பட்ட படி செயற்றிட்டத்திற்கு நிதி முதலீடு செய்துள்ள உங்களது அமைச்சின் மூலம் கடந்த வருடத்தை விட முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக் கொண்டுள்ள துறைகள் பிரிவுகள் என்ன ?

இ. அபிவிருத்திக்காக தொடர்ந்தும் நிதியினை செலவு செய்த போதும் முன்னைய வருடத்திக்கு இணங்கிய வகையில் முன்னேற்றம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளாத துறைகள் / பிரிவுகள் யாவை ?

ஈ. அவ்வாறு முன்னைய வருடத்தை விட முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக் கொள்ளாத துறைகள் / பிரிவுகளை மிகவும் பயனுள்ள முறையில் மாற்றுவதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

உ. அச் செயற்றிட்டத்திற்கு மேலதிகமாக இப் புதிய வருடத்தில் நடைமுறைப் படுத்த இனங் காணப்பட்ட புதிய தொழில்களை உருவாக்கக் கூடிய புதிய செயற்றிட்டங்கள் காணப்படுகின்றனவா ?

ஊ. அவ்வாறாயின் அவை யாவை என முன்வைப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2017.04.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/30)**

அ. கடந்த வருடத்தினுள் மாகாண வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் உங்களது அமைச்சின் மூலம் கம்பஹ, களுத்துறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் வெவ்வேறாக என்ன ?

ஆ. மேலே குறிப்பிடப்பட்ட படி செயற்றிட்டத்திற்கு நிதி முதலீடு செய்துள்ள உங்களது அமைச்சின் மூலம் கடந்த வருடத்தை விட முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக் கொண்டுள்ள துறைகள் பிரிவுகள் என்ன ?

இ. அபிவிருத்திக்காக தொடர்ந்தும் நிதியினை செலவு செய்த போதும் முன்னைய வருடத்திக்கு இணங்கிய வகையில் முன்னேற்றம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளாத துறைகள் / பிரிவுகள் யாவை ?

ஈ. அவ்வாறு முன்னைய வருடத்தை விட முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக் கொள்ளாத துறைகள் / பிரிவுகளை மிகவும் பயனுள்ள முறையில் மாற்றுவதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

உ. அச் செயற்றிட்டத்திற்கு மேலதிகமாக இப் புதிய வருடத்தில் நடைமுறைப் படுத்த இனங் காணப்பட்ட புதிய தொழில்களை உருவாக்கக் கூடிய புதிய செயற்றிட்டங்கள் காணப்படுகின்றனவா ?

ஊ. அவ்வாறாயின் அவை யாவை என முன்வைப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.04.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/34)**

அ. 2014 அல்லது அதற்கு அண்மித்த வருடமொன்றில் பண்டாரகம பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் பண்டாரகம புதிய பஸ் தரிப்பிடம் அமைந்துள்ள கட்டடம் மற்றும் அதன் கூரை பழுதுபார்க்கப்பட்டதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அதற்காக செலவு செய்த நிதி எவ்வளவு ?

இ. இந்த செயற்றிட்டம் கேள்வி நடைமுறை மூலமா வழங்கப்பட்ட ஒன்று ? இல்லையாயின் நேரடி முதலீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒன்றா ?

ஈ. கேள்வி நடைமுறை மூலம் வழங்கப்பட்டிருந்தால் ஒப்பந்தம் செய்யப்பட்ட கேள்வியாளர் அல்லது தாபனம் என்ன ?

உ. அதன் கூரைக்காக பயன்படுத்தப்பட்டிருந்த எல்லா கூரைத் தகடுகளும் அகற்றப்பட்டுள்ளன என்பதனை அறிவீர்களா ?

ஊ. அவ்வாறு அகற்றப்பட்ட கூரைத் தகடுகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு பிரதேச சபை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதா ? இல்லையாயின் அவற்றுக்கு என்ன நடந்தது ?

**05.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2017.04.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/36)**

அ. (i) கம்பஹா சனச மூலம் ரூபா 106 மில்லியன் செலவு செய்து நிர்மானிக்கப்பட்ட சனச சுவ செவன கட்டடம் கம்பஹா வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

(ii) அவ்வாறு நன்கொடையாக வழங்கப்பட்டு எவ்வளவு காலம் சென்றுள்ளது ?

ஆ. (i) இந்த சனச சுவ செவன எந்த நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது ?

(ii) இவ்வாறான பெறுமதி மிக்க கட்டடம் ஒன்றை இது வரை எக் காரணத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கவில்லை ?

**06.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2017.04.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/37)**

அ. பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்கு உரிய ஒழுங்கு முறைகள் யாவை ?

ஆ. ஒழுங்கு முறைகளுக்கு மாறாக அதிபர்களை நியமிக்க முடியுமா ? அப்படியாயின் எவ்வாறான நிலைமை ஒன்றின் கீழ் ?

இ. அதிபர்களை நியமிப்பதற்காக நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றாதவர்களையும் கருத்தில் கொள்வீர்களா ? அது எவ்வாறான நிலைமையின் கீழ் ?

ஈ. பட்ட பின் படிப்பு, பட்டமுள்ள நிலைமையில் ஆசிரியர்களை நியமிக்கும் போது சட்ட டிப்ளோமாவிற்கும் இடம் கிடைக்கின்றதா ?

உ. பாடசாலையில் உள்ள அதிபருக்கு அறிவிக்காமல் புதிதாக அதிபர் ஒருவருக்கு வேலையினை ஒப்படைக்க இயலுமா ?

ஊ. அதிபர் ஒருவரின் அங்கீகாரமின்றி லோக் குறிப்பு புத்தகத்தை பயன்படுத்த முடியுமா ? அது எவ்வாறான நிலைமையின் கீழ் ?

எ. ஓய்வு பெற்ற கல்வி உத்தியோகத்தர்களுக்கு மற்றும் அதிபர்களுக்கு பாடசாலையினுள் ஆசிரியர்களுக்கு கட்டளை வழங்க மற்றும் நிர்ப்பந்தம் செய்ய சட்டரீதியான அதிகாரம் காணப்படுகின்றதா ? இல்லையாயின் அவ்வாறு செய்பவர்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஏ. கிழக்கு அரவ்வல தர்மபால வித்தியாலயத்திற்கு புதிய அதிபர் ஒருவரை நியமிக்கும் போது மேற்கூறப்பட்ட அநீதி நடவடிக்கை இடம்பெற்றுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஐ. வலைய கல்வி காரியாலயம் கூட அறியாத படி மே/மா பிலி/கிழக்கு அரவுவ்வல தர்மபால வித்தியாலயத்திற்கு எவ்வாறு அதிபர் ஒருவரை நியமிக்க முடியுமா ?

ஒ. அவ்வாறு நியமிக்கப்பட்டிருந்தால் எந்த அதிகாரியினால் ?

ஓ. முறையற்ற ரீதியில் செயற்படுவதன் மூலம் பாடசாலை அமைப்பில் இடம்பெறும் பாதிப்பிற்கு எவர் பொறுப்புச் சொல்ல வேண்டும் ?

ஔ. இந்த நியமனம் தொடர்பான தவறினை திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாது ?

**07.** **கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.04.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(Îæ/vi (1)17/38)**

அ. மே.மா. வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பிரதி முகாமையாளர் நிதி, நிர்வாக பதவிகளுக்காக வெற்றிடம் காணப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அந்த இரண்டு பதவிகளுக்காக விண்ணப்பதாரிளை எவ்வாறு ஆட்சேர்த்தீர்கள் ?

இ. இந்த பதவிகளுக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமையை ஆராய்ந்து பார்த்தீர்களா ?

ஈ. அது எவ்வாறு ?

உ. அந்த பதவிகளுக்கு தேவையான கல்வி தகைமை இல்லாதவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதனை அறிவீர்களா ?

ஊ. அது எவ்வாறு நிகழ்ந்தது ?

எ. இந்த பதவிகளுக்காக தகைமை உள்ளவர்களை ஏன் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யவில்லை ?

ஏ. இந்த நியமனம் நியதிச் சட்டத்தின் 115 ஆவது ஏற்பாட்டின் கீழா மேற்கொள்ளப்பட்டது ?

**08.** **கௌரவ ஓ.டப். பிரசன்ன சஞ்ஜீவ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/39)**

அ. பேருவளை பிரதேச சபையின் கணனி பயிற்சி நிலையத்தில் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் பாடநெறியினைப் பயின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அந்தப் பாடநெறியின் கட்டணம் எவ்வளவு ?

இ. அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நிதி எவ்வளவு ?

ஈ. அவற்றைப் பெற்றுக் கொண்டு கணனி நிலையத்திற்கு வழங்கிய சேவைகள் என்ன ?

உ. 2017 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஊ. பாடநெறிக்கு உரியதாக அந்தப் பிள்ளைகளுக்கு எல்லா புத்தகங்களும் வழங்கப்பட்டு உள்ளனவா ?

எ. தற்போது கல்வி நடவடிக்கை இடம்பெறும் முறை யாது ?

ஏ. ஆசிரியைக்கு வழங்கப்பட்டுள்ள உதவியாளருக்கு கணனி தொடர்பான அறிவு காணப்படுகின்றதா ?

ஐ. 2014, 2015, 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் கணனி பயிற்சி நிலையத்திற்குப் பொறுப்பாக காணப்பட்ட அலுவலகர் அல்லது அலுவலகர்கள் யார் ?

ஒ. இந்த சொத்துக்களுக்குப் பொறுப்பாக உள்ளவர் யார் ?

ஓ. இதனை 2014 தொடக்கம் 2016 வரை மேற்பார்வை செய்த அலுவலகர் யார் ?

**09.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/40)**

அ. (i) களுத்துறை கல்பாத எல்லைப்புற வைத்தியசாலையில் கடமையாற்றும் டி.எல்.டப். திலக்குமார என்ற பெயர் கொண்ட சேவகரினது பதவி என்ன ?

(ii) அந்த வைத்தியசாலையின் அவரின் சேவைக் காலம் எவ்வளவு ?

(iii) இந்த வைத்தியசாலைக்கு சேவைக்கு வந்த வருடம் மற்றும் திகதி என்ன ?

ஆ. (i) இந்த நபரினால் ஒரு வருடத்திற்கு முன் சிகிச்சைப் பெற வருகை தந்த மந்த புத்தியுள்ள நோயாளி ஒருவருக்கு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

(ii) இது தொடர்பாக வைத்தியசாலை செயற்குழுவின் அங்கத்தவரினால் அறிவிக்கப்பட்ட போதும் நிலையப் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தரினால் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

(iii) இதற்குக் காரணம் என்ன ?

இ. (i) மேற்கூறிய நபரினால் தொடர்ச்சியாக நோயாளிகளுக்கு தவறான வார்த்தைகளினால் ஏசுதல், மற்றும் பயமுறுத்தல் விடுத்தல் தொடர்பாக வைத்தியசாலைக் குழுவின் அங்கத்தவர்களினால் அறிவிக்கின்ற படியால் குழு அங்கத்தவர்களை அழைத்து தகவல்களைப் பெற்று விசாரணை ஒன்னை மேற்கொள்ள முடியுமா ?

(ii) அது எவ்வளவு காலத்தில் ?

(iii) அந்த விசாரணையின் அறிக்கையினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

**10.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/41)**

அ. (i) ஹொரனை நகர சபையின் மூலம் 2014 ஆம் ஆண்டில் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாழும் மக்களின் தேகாரோக்கிய நிலைமையை உயர்த்த மற்றும் நகரப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் எவை ?

(ii) அதற்காக செலவு செய்த நிதி எவ்வளவு ?

(iii) செயற்றிட்டம், செயற்றிட்ட அறிக்கை, செலவு செய்த நிதி வெவ்வேறாக எவ்வளவு ?

(iv) அதனை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஆ. (i) இந்த செயற்றிட்டத்திடன் கீழ் நகர எல்லையினுள் பால் விற்பனை நிலையத்தினை நிர்மானித்தீர்களா ?

(ii) நிர்மானிக்கப்பட்ட பால் விற்னை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(iii) எந்த இடங்களில் ?

(iv) அதற்காக செலவு செய்த நிதி வெவ்வேறாக எவ்வளவு ?

இ. (i) இந்தப் பால் விற்பனை நிலையம் தற்போது இயங்குகின்றதா ?

(ii) இல்லையாயின் இதற்குக் காரணம் என்ன ?

(iii) இந்த விற்பனை நிலையத்தினால் சபைக்கு கிடைக்கப் பெற்ற வருமானம் எவ்வளவு ?

(iv) இந்த விற்பனைச் சாலையினை பெற்றுக் கொடுக்கும் போது நகர சபை நடைமுறைப்படுத்திய ஒழுங்கு முறை என்ன ?

**11.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)1742)**

அ. கட்டுநாயக சீதுவ நகர சபையின் செயலாளர் கட்டான பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையின் பொதுக் காணியில் நிர்மாணம் ஒன்றை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கியுள்ளாரா ?

ஆ. அவ்வாறு அங்கீகாரம் வழங்கியிருந்தால் அப் பொதுக் காணியின் அளவு எவ்வளவு ? அந்த அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்ட நபரின் பெயர் என்ன ?

இ. மேற்கூறிய படி பொதுக் காணியின் ஒரு பகுதியில் நிர்மானத்தை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்க செயலாளருக்கு இயலுமா ?

ஈ. மேற்கூறிய படி பொதுக் காணியின் நிர்மானத்தை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கியிருந்தால் அச் செயலாளர் அதிகாரத்தை மீறி செயற்பட்டது தொடர்பாக விசாரணை ஒன்றினை மேற் கொள்வீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**12.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)17/43)**

அ. மஹரகமை பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கம் மாகாண கூட்டுறவு ஆணையாளரின் மேற்பார்வையின் கீழேயா உள்ளது ?

ஆ. 2011 ஆம் ஆண்டின் இக் கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகள் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதா ?

இ. மஹரகமை கூட்.டுறவு எண்ணை நிரப்பும் நிலையத்தின் நிதி நடவடிக்கை தொடர்பாக மோசடி நிலைமை ஒன்று வெ ளியாகியதா ?

ஈ. இது தொடர்பாக அறிக்கை ஒன்றினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம்

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை :**

“2017.04.04 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் வரப்பட்ட முடிவிற்கு இணங்க, இன்றைய தினம் (2017.04.25 ஆந் திகதி) கலைந்து சென்ற பின், இச் சபையானது 2017 மே மாதம் 23 ஆந் திகதி (செவ்வாய்க் கிழமை) மு.ப. 09.30 க்கு கூட வேண்டும்.”

## X. சபை நடவடிக்கை

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை :**

“ இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்.”

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ கித்சிறி கஹடபிடிய அவர்கள்**

உலகமயமாக்கத்தினுள் ஒருங்கிணைந்த நாட்டினுள் சர்வதேச தொடர்புகளைப் பேணி நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு மேன்மைதங்கிய ஜனாதிபதியும் கௌரவ பிரதம மந்திரியும் ஒன்று சேர்ந்து நல்லாட்சி அரசு ஒன்றை உருவாக்கி நாட்டின், மக்களுக்காக மேற்கொள்ளும் பணியிற்கு மேல் மாகாண மாகாண சபை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.
**(பி/vi(1)16/03)**

{ 2017.03.21 ஆந் திகதி சபைக் கூட்டத்துடன் தொடர்புடையது }

**02.** **கௌரவ பீ.டி.அபேரத்ன அவர்கள்**

களுத்துறை மாவட்டத்தின் அகலவத்தை தேர்தல் தொகுதியின், அகலவத்தை பிரதேச செயலாளர் பிரிவின் ரத்மலே கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள "தம்பதொல அல்ல" உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக வரும் மிகவும் அழகான சுற்றாடல் ஒனறில் காணப்படும் நீர்வீழ்ச்சி ஒன்றாகும்.

இவ் இடத்திற்கு உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கி, அபிவிருத்தி செய்து மேல் மாகாண சுற்றுலாத் துறை அமைச்சின் கீழ் பேணிச் செல்ல வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)16/04)**

**03.** **கௌரவ லலித் எல்லாவல அவர்கள்**

மேல் மாகாணத்தினுள் பதிவு செய்துள்ள முன்பள்ளி அபிவிருத்தி நிலையங்களுக்கு மேலதிகமாக ஒழுங்கற்ற முறையில் நடாத்தப்படும் முன்பள்ளிகளை ஒழுங்குபடுத்தி பதிவு செய்யுமாறும் இது தொடர்பாக விஷேட அறிவுள்ள ஒழுங்கான ஆலோசனைக் குழுவொன்றை நியமிக்குமாறும் பதிவு செய்யப்பட்டுள்ள முன் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 5000/- படி ஒன்றினை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறும் இந்த மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)17/01)**

## XII. பொது நடவடிக்கை

**01.** **இசுர தேவப்பிரிய - கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை** :

**2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 ஆவது பிரிவிற்கு இணங்க மாகாண சபை முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2016 ஆம் ஆண்டு**

"முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2016" என்ற அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதற்கு இணங்க முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்தும் போது 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 ஆவது பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள படியாலும்,

அத் திருத்தங்களை மேற் கொள்வதற்காக மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் சபையின் அங்கீகாரத்தின் கீழே வழங்கப்பட்டுள்ள படியாலும்,

அந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படி அம் முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துவது இம் மேல் மாகாண மாகாண சபை அங்கீகரிக்கின்றது.

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.04.05 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.